| கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2020<br>மன்னார் கல்வி வலயம் | | | | |
|---|---|---|---|---|
| **வணிகக் கல்வி - 11** | **32** | **T** | **II** | 03 மணித்தியாலயம்<br>**(மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்)** |

**அறிவுறுத்தல்கள் :-**
ஒவ்வொரு வினாவிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக..

## பகுதி - I

**01.** Covid – 19 தாக்கத்தினால் இன்று ஏற்பட்டுள்ள பாதிப்பானது சுகாதார ரீதியானதாக மட்டுமே இன்று பார்க்கப்பட்டாலும் எதிர்வரும் காலங்களில் இது பாரிய பொருளாதார ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தப் போகின்றது எனவும் எச்சரிக்கப்படுகின்றது. உலக நாடுகளின் உற்பத்திகள் மற்றும் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதுடன் சுற்றுலாத்துறையும் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

இன்றைய பூகோளமய சந்தையில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்களும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதுடன் உலக நாடுகளின் அரசாங்கங்களும் இவ் 2020ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகதியினை பொருளாதாரமொன்றின் மந்தமான நிலைமையுடன் நடாத்திச் செல்லவேண்டியிருக்கும் என எதிர்வு கூறுவதுடன் சவால்களை எதிர்நோக்கியிருக்கும் சுகாதாரத் துறையினையும் துரிதமாக முன்னேற்ற வேண்டிய தேவையும் எழுந்துள்ளது எனவும் பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

i. அ. வணிகமானது பொருளாதாரமொன்றின் நீடித்த நிலைப்புத்தன்மைக்கு பங்களிப்புச் செய்யும் முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. Covid – 19 தாக்கத்தினால் நாடொன்று எதிர்நோக்கக்கூடிய பொருளாதார ரீதியான முக்கிய பிரச்சினைகள் இரண்டினை விபரிக்குக. (2 புள்ளிகள்)

ii. மேலுள்ள விடய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலை முறையிலான கைத்தொழிலின் பண்புகள் நான்கினைத் தருக. (4 புள்ளிகள்)

iii. அ. பூகோள மயமாக்கல் உள்நாட்டு வணிகங்கள்மீது ஓற்படுத்தும் சார்பான மற்றும் எதிரான செல்வாக்குகள் இரண்டு வீதம் விபரிக்குக. (2 புள்ளிகள்)

ஆ. மேலுள்ள விடய ஆய்வில் முன்னிறுத்தப்படும் பேரண்டச் சூழல் காரணிகளைக் குறிப்பிட்டு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

iv. அ. சுற்றுலாத்துறையின் மேம்பாட்டிற்கு இலங்கை போன்ற நாடு ஒன்று மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கினை விபரிக்குக (2 புள்ளிகள்)

ஆ. சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்தால் வாய்ப்பினைப்பெறும் கைத்தொழில் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்கும் கைத்தொழில் ஒன்று வீதம் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

v. Covid – 19 இனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு ABC பிறைவெட் லிமிட்டட் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

i. தமது ஊழியர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்.
ii. பிரதேச வைத்தியசாலையில் அவசரச் சேவைப்பிரிவு ஒன்றினை நிறுவுவதற்கு உதவுதல்.
iii. விஷேட விலையில் உதவித்திட்டத்தின் கீழ் பொருட்களை விற்பனை செய்தல்.
iv. தமது வணிகத்தின் எதிர்கால பாதுகாப்பிற்காக வினைத்திறன் கொண்ட முகாமைத்துவக் கொள்கைகளை வடிவமைத்தல்.

அ. மேற்குறித்த நடவடிக்கைகள் மூலம் அனுகூலமடையும் வணிகத்தின் அக்கறையுடையோரைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

ஆ. மேற்குறித்த வணிகத்துடன் தொடர்புடைய எண்ணக்கரு எவ்வாறு அழைக்கப்படும். இதனை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் இரண்டினை எழுதுக (2 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**02)**

i. “வணிகத்தின்மீது அக்கறைசெலுத்தும் பிரிவினர்களுக்கும், பொதுவாக சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையில் காரணிகள் பல வளர்சியடைந்த வண்ணம் உள்ளள”. இதற்குப்பொருத்தமான காரணிகள் நான்கினை குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

ii. அ. சமூகப்பொறுப்பு எண்ணக்கருவினால் உரிமையானர், ஊழியர்கள், வாடிக்கையாளர், சமூகம் போன்ற அக்கறை கொண்ட தரப்பினர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. வணிகங்கள் சமூக நிலைபேறான அபிவிருத்திக்கு ஆற்றக்கூடிய கருமங்கள் நான்கினை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. இலங்கையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அரசின் அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வணிகங்கள் நான்கினை பெயரிடுக. (4 புள்ளிகள்)

iv. அ. நேர் வரிக்கும், நேரில் வரிக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டைக்குறிப்பிட்டு அவ் ஒவ்வொரு வரி வகைக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

ஆ. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் பொறுப்புக்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றை விபரிக்குக. (2 புள்ளிகள்)

**v.** இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனத்தின் நோக்கங்கள் நான்கினை விபரிக்குக. (4 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**03)**

i. “புதிய வணிகமொன்றினை ஆரம்பிக்க எண்ணியுள்ள நண்பர் குழு ஒன்று, வரையறுக்கப்பட்ட (தனியார்) கம்பனி ஒன்றை ஆரம்பிப்பதிலும் பார்க்க பங்குடைமை வணித்தை ஆரம்பிப்பது சிறந்தது எனக் கருதுகின்றனர்” வரையறுக்கப்பட்ட (தனியார்) கம்பனி ஒன்றுடன் ஒப்பிடும் பொழுது பங்குடைமை வணிகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டி காரணங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

ii. கொரோனா வைரஸ் (Covid - 19) தொற்றின் காரணமாக அனைத்து நாடுகளுமே பொருளாதார ரீதியான பின்னடைவினை சந்தித்துள்ளது எனினும் பல்வேறு வகையான முயற்சியாண்மைகள் தோற்றம் பெற்று வருகின்றன. தற்காலத்தில் முயற்சியாண்மை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுள் பல வெற்றியினை அடைகின்ற போதிலும் சில நிறுவனங்கள் தோல்வியடைகின்றன. சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களின் வெற்றியிலும் தோல்வியிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iv. அ. முயற்சி மூலதனக் கம்பனிக்கு உதாரணம் ஒன்றினைக் குறிப்பிட்டு, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான அதனது பணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் நடாத்திச் செல்லப்படும் வணிகங்களின் நான்கு பண்புகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

v. அ. இலங்கை அரசாங்கம் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான காரணங்கள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ. அரச நிறுவனங்கள் தனியார்மயப் படுத்தப்படுவதனால் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய அநுகூலங்கள் இரண்டினையும், வரையறைகள் இரண்டினையும் தருக. (2 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**04)**

i. அ. பங்குத்தரகர் கம்பனி என்பதனை விளக்கி, அதற்கு ஒரு உதாரணத்தை முன்வைப்பதுடன், அதன் பணிகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் வணிகங்களின் வளர்ச்சிக்காக நிதிக்கம்பனிகளின் சேவைகள் இரண்டினை விபரிக்குக. (2 புள்ளிகள்)

ii. அ. ''கொடுப்பனவுகளைத் தீர்ப்பதில் தற்போது காசோலைகளின் பயன்பாடு குறைவடைந்துள்ளது'' இத்தகைய போக்குக்கு நான்கு காரணங்களைத் தருக. (2 புள்ளிகள்)

ஆ. இலத்திரனியல் பண அட்டையின் பயன்பாட்டை அதிகரிக்க வங்கி மேற்கொள்ளக்கூடிய விசேட மேம்படுத்தல், ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

iii. அ. ரவி தனது 4மில்லியன் மோட்டார் வாகனத்தை A, B ஆகிய காப்புறுதி நிறுவனங்களில் முறையே 4மில்லியன், 2மில்லியன் பெறுமதிக்கு காப்புறுதி செய்தார்.

1. இக்காப்புறுதி எவ்வாறு அழைக்கப்படும்
2. இதன் பொழுது இழப்பீடு வழங்க பின்பற்றும் பிரதான தத்துவம் யாது
3. வாகனம் முழுமையாக சேதமடைந்தால் A, B காப்புறுதி நிறுவனம் வழங்கும் இழப்பீட்டு உதவித் தொகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

ஆ. தனராஜ் பல தேயிலை, இறப்பர் தோட்டங்களின் உரிமையாளராவார். இவருக்கு இரு தொழிற்சாலைகள் உரிமையாக இருப்பதுடன் தோட்டங்களில் 50 ஊழியர்கள் வேலை செய்கின்றனர். சொந்த வாகனம் மூலம் நாடு முழுவதும் தேயிலை விநியோகிக்கப்படுவதுடன் ஏற்றுமதியும் இடம்பெறுகின்றது. தனராஜ் எதிர்நோக்கும் இடர்கள் நான்கினைக் குறிப்பிட்டு அதற்குப் பொருத்தமான காப்புறுதி ஒப்பந்தங்களைத் தருக.

(2 புள்ளிகள்)

iv. அ. ரவி நிறுவனமொன்றின் முகாமையாளராவார். இவர் வினைத்திறன் கொண்ட தொடர்பாடலில் ஈடுபட ஆர்வமாக உள்ளார். வினைத்திறனான தொடர்பாடலில் இருக்க வேண்டிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. ''இலங்கையில் வீதீ விபத்துக்களுக்கான தீர்வுகள்'' என்ற தலைப்பில் ஒப்படை ஒன்றை எழுதுமாறு உமது பாடசாலையால் நீர் கேட்கப்பட்டிருக்கின்றீர் எனக்கருதுக. உமது அறிக்கையில் நீர் உள்ளடக்கவுள்ள நான்கு தீர்வுகளை விபரிக்குக.

(2 புள்ளிகள்)

v. அ. ''வெளிநாட்டு வியாபாரம் பொருளாதார அபிவிருத்திக்கு துணையாக அமைகின்றது''. இக்கூற்றுக்கு ஆதரவான கருத்துக்களை முன்வைக்குக. (2 புள்ளிகள்)

ஆ. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் தீர்வையற்றத் தடைகள் இரண்டினை விபரிக்குக. (2 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

## பகுதி II

**5)**

i. "இராகவன் தனது மகனின் உயர்கல்வி தேவைக்காக மடிக்கணினி ஒன்றை கொள்வனவு செய்ய விரும்பினான். இணைய தளத்தில் பிரவேசித்து பார்வையுற்றபோது வேறுபட்ட வியாபாரப் பெயர்களை உடைய கணினிகள் காணப்பட்டன அவரது நண்பன் தரத்திற்கான கூறுகளை கவனத்திற்கொண்டு கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை கூறினான்''.

அ. இராகவன் கருத்திற் கொள்ள வேண்டிய தரத்திற்கான கூறுகள் நான்கு குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ஆ. தரக்கட்டுப்பாட்டுக்காக பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் நான்கு குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

ii. 2019ம் ஆண்டிற்கான உற்பத்தித் திறன் விருது கேசவன் கம்பனி பெற்றுக்கொண்டது.

அ. இவ் உற்பத்தித் திறனை மேம்படுத்தப் பயன்படுத்துகின்ற நவீன உற்பத்தி முறைகள் இரண்டை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ. A, B என்னும் உற்பத்தி நிறுவனங்கள் இரண்டின் உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பான தரவுகள் பின் வருமாறு.

| விபரம் | A நிறுவனம் | B நிறுவனம் |
|---|---|---|
| மூலப்பொருள் அலகுகள் | 3 000 | 3 000 |
| உழைப்பு – மணித்தியாலத்துக்கு | 1 500 | 1 500 |
| இயந்திராதிகள் | 1 500 | 1 500 |
| முடிவுப் பொருட்கள் | 15 000 | 18 000 |

**பின்வருவனவற்றைக் காண்க?**

a. மூலப்பொருள் உற்பத்தித் திறன்

b. உழைப்பு உற்பத்தித் திறன் (2 புள்ளிகள்)

iii. பால்மா வகை உற்பத்தி நிறுவனமொன்று அனைத்து பிரிவினருக்கும் தேவையான பால்மா வகை உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றது.

அ. இவ்வுற்பத்திக்குத் தேவையான பொருட்கள், சேவைகள் நான்கு வீதம் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. பொருட்கள், சேவைகள் கொள்வனவிற்காக பயன்படுத்தப்படுகின்ற படிமுறையை ஒழுங்குபடுத்தி தருக. (2 புள்ளிகள்)

iv. அ. தலைவர், முகாமையாளர்கள் நிறுவனங்களில் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றி வருகின்றனர். இவ்வகையில் இவ்விரு பிரிவினருக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. தலைமைத்துவப் பாங்கின் பிரதான வகைப்படுத்தலைக் காட்டி அவற்றுள் ஜனநாயகத் தலைவருக்கும் தலையிடாத் தலைவருக்கும் இடையிலான வேறுபாட்டைக் எடுத்துக்காட்டுக. (2 புள்ளிகள்)

v. அ. கிரய வகைகளான நிலையான கிரயம், மாறும் கிரயம் என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ. அலங்காரப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்றின் உற்பத்தி இயலளவு மாதாந்தம் 2000 அலகுகளாகும் இவ்வுற்பத்தி தொடர்பான ஏனைய தகவல்கள் பின்வருமாறு.....

| | |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | ரூ 300 |
| அலகொன்றின் மாறும் கிரயம் | ரூ 150 |
| நிலையான கிரயம் | ரூ 1500 |
| உத்தேச உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை | 1500 |

சமப்பாட்டுப் புள்ளியின் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

6)

i. “ நுகர்வோர் தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொருளொன்றிற்கு அல்லது சேவை ஒன்றிற்கு இருக்கும் ஆற்றலே தரம் என்பதாகும்”

வணிக நிறுவனமொன்றிற்கு தரக்கட்டுப்பாடு முக்கியத்துவமுடையதற்கான காரணங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

ii. “ உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக உத்தம மட்டத்தில் இருப்பைப் பேணுதல் இருப்புக் கட்டுப்பாடு எனப்படும்.”

அ. இருப்புக்கட்டுப்பாட்டு நுட்பங்கள் நான்கு தருக? (2 புள்ளிகள்)

ஆ. இருப்பு மட்டங்களைக் கணிப்பிடும் பொழுது கவனம் செலுத்தவேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. அ. நவீன பரிமாற்றுப் பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படும் அடிப்படைச் சந்தைகளை வகைப்படுத்துக. (2 புள்ளிகள்)

ஆ. சந்தைப்படுத்தல் மைய எண்ணக்கரு தொடர்பில் செலுத்தப்பட்ட, உரிமையாக்கப்பட்ட ஊடகம் என்பதை விளக்குக. (2 புள்ளிகள்)

iv. வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு சந்தைப்படுத்தல் கலவையானது எவ்வாறு முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்றது என்பதை விளக்குக. (4 புள்ளிகள்)

v. அ. சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் ‘‘விலை’’ என்பதை வரையறை செய்க. (2 புள்ளிகள்)

ஆ. பொருத்தமான விநியோக வழிமுறை ஒன்றைத் தீர்மானிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

**(5 x 4 = 20 புள்ளிகள்)**

**7)**

‘‘வரையறுக்கப்பட்ட சாமுவேல் கம்பனியின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 31/12/2019ம் ஆண்டுக்கான தரவுகள் வருமாறு’’

| விபரம் | ரூபா |
|---|---|
| விற்பனை வருமானம் | 5,00,000 |
| விற்பனைக் கிரயம் | 3,00,000 |
| மொத்த இலாபம் | 2,00,000 |
| செலவீனங்கள் | 50,000 |
| குறித்த ஆண்டுக்கான தேறிய இலாபம் | 1,50,000 |
| **31/12/2019 இல் மீதிகள்** | |
| கட்டிடம் | 1,25,000 |
| விநியோக வேன் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 1,00,000 |
| கடன் பட்டோர் | 75,000 |
| வங்கி மீதி | 25,000 |
| கடன் கொடுத்தோர் | 100,000 |

i. .மேற்குறிப்பிடப்பட்டத் தகவல்களிலிருந்து பின்வருவனவற்றைக் கணிக்குக.

A. மொத்த இலாப வீதம்

B. தேறிய இலாப வீதம்

C. நடைமுறை வீதம்

D. இருப்புப் புரள்வு (2 புள்ளிகள்)

ஆ. நீர் கணிப்பிட்ட விகிதங்களை கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாக விபரிக்குக.......

A. திரவத்தன்மை

B. இருப்புப் புரள்வு தடவை (2 புள்ளிகள்)

ii. அ. ஒரு நிறுவனம் தமது வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆளணியினரை நிறுவனத்திற்குள்ளிருந்து ஆட்சேர்ப்புச் செய்யத் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தின் அநுகூலங்களையும், வரையறைகளையும் தனித்தனியே குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ஆ. ஊழியர்களுக்குப் பயிற்சியும், அபிவிருத்தியும் அளித்தலுக்காக பயன்படுத்தும் முறைகள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

iii. ‘‘ நிறுவனம் ஒன்றுக்குத் தனி நபர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்படும் ஆவணம் தொழிலறிவித்தலாகும்’’ இந்தவகையில் தொழிலறிவித்தல் ஒன்றில் உள்ளடக்கப்படும் நான்கு தகவல்களை விபரிக்குக.

(4 புள்ளிகள்)

iv. அ. " நிதித் தேவைப்படுவோரையும், நிதியத்தை வழங்குவோரையும் தொடர்பு படுத்துவதற்காக காணப்படும் இடம் அல்லது சந்தர்ப்பம் நிதிச்சந்தை எனப்படும்"
நிதிச்சந்தையின் கட்டமைப்பு உள்ளடக்கியுள்ள சந்தைகள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
ஆ. பிரதான பெயர் பலகையில் சாதாரண பங்குகளை பட்டியல் படுத்துவதற்காக நிறைவு செய்ய வேண்டிய இரு தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

v. அ. தரவு செயன்முறைப்படுத்தலின் (Funtion Of Data Processing) பணிகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)
ஆ. பயன்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமையின் வகைகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

**(4 x 5 = 20 புள்ளிகள்)**

**8)**

i. "நிறுவனங்கள் தொழிலுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கும், மிகவும் பொருத்தமான நபரைத் தெரிவு செய்வதற்கும் பல்வேறு முறைகளைப் பயன்படுத்துகின்றனர்" இம்முறைகளின் நான்கு முறையினை விபரிக்குக.

(4 புள்ளிகள்)

ii. அ. "தொழில் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான எழுத்துமூல சாட்சியொன்றாக நியமனக்கடிதம் காணப்படுகின்றது" நியமனக்கடிதமொன்றில் உள்ளடக்கியுள்ள தகவல்களை வகைப்படுத்தக்கூடிய நான்கு முறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
ஆ. நிறுவனமொன்றின் உள்ளகரீதியான நிதியீட்டல் வழிமுறைகளின் அநுகூலங்கள் நான்கினை முன் மொழிக. (2 புள்ளிகள்)

iii. அ. நிறுவனமொன்றிற்கு தகவல் தொழிநுட்பத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)
ஆ. அன்றாடக் கருமங்களை மேற்கொள்வதற்கு தனிநபர் ஒருவருக்கு இணைய வலயமைப்பினூடாக பெற்றுக்கொள்ளக் கூடிய நான்கு வழிகளை விபரிக்குக. (2 புள்ளிகள்)

iv. அ. செயற்பாட்டுத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படைக் கூறுகளை விபரிக்குக. (2 புள்ளிகள்)
ஆ. வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டுச் செலவுகள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

v. நிதித்தட்டத்தின் பிரிவுகளில் ஒன்றாகிய செயற்றிட்ட சுருக்கம் என்பதனை விளக்கி, அதனுள் உள்ளடக்கவேண்டிய விடயங்களைத் தருக. (2 புள்ளிகள்)

-

**(4 x 5 = 20 புள்ளிகள்)**